**செ.வெ.எண்: 60** **நாள்:27.10.2021**

# வடகிழக்கு பருவமழை – 2021 முன்னெச்சரிக்கை தொடர்பான பத்திரிக்கை செய்தி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயற்கை இடர்பாடுகள் குறித்து பொதுமக்கள் அனைவரும் முன்கூட்டியே துல்லியமாக அதிகாரபூர்வமான தகவல்களை அறிந்து கொள்ளவும், அவற்றிலிருந்து தற்காத்து கொள்ளவும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து அவரவர் ஆண்ட்ராய்டு அலைபேசி மூலம் அறிந்துகொள்ள TNSMART என்னும் செயலியை Google Play Store-இல் இருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்திடுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. TNSMART செயலி மூலம் தங்கள் பகுதியில் நிலவும் வானிலை அறிக்கை, மழையளவு விபரம், செயற்கைகோள் புகைப்படங்கள் (IMD), பேரிடர் காலங்களில் பாதிக்கக்கூடிய பகுதிகளின் வரைபடங்கள், பேரிடர் காலங்களில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை போன்ற அறிவுரைகளும் இந்த செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம். நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அவசரகால கட்டுப்பாட்டு அறை துவங்கப்பட்டு 24 மணி நேரமும் பணியாற்றும் வகையில் சுழற்சி முறையில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அவசர கால கட்டுப்பாட்டு மையத்தினை பொதுமக்கள் தொடர்பு கொள்ள வசதியாக 1077 கட்டணமில்லா தொலைபேசி எண் வழங்கப்பட்டுள்ளது. இந்த தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பொதுமக்கள் இயற்கை இடர்பாடு தொடர்பான புகார்களை தெரியப்படுத்தலாம். மேலும், அவசரகால மையத்தில் தரைவழி தொலைபேசி (Landline Phone) 04365-251992 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**